# “மோடியின் தவறான அயலுறவுக் கொள்கையும், எரிவாயு, கச்சா எண்ணெய் தட்டுப்பாடும்!”

இந்தியாவை, அமெரிக்காவின் கொத்தடிமையாக அடகு வைத்து மாற்றி எழுதி வருகிறார் நரேந்திர மோடி. இந்திய அயலுறவுக் கொள்கைகளைக் கை கழுவிவிட்ட அவரின் தலைமையிலான பா.ஜ.க.அரசு; அடிபணிந்ததையொட்டி ”30 நாட்களுக்கு வேண்டுமானால், இந்தியா எண்ணெய் இறக்குமதி செய்து கொள்ளலாம் என அமெரிக்காவின் சர்வாதிகார டொனால்டு டிரம்ப் அரசு விதித்த இறக்குமதிப் பொருளாதாரத் தண்டனையாக இந்தியாவுக்கு அனுமதி வழங்கி உள்ளது. இது இந்தியாவின் இறையாண்மையையே புதைகுழிக்கு அனுப்பி வைத்த மாபெரும் பெருமை மோடிக்குத்தான் சேரும் .

**இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை முடிவு செய்வது இந்தியாவா? அல்லது அமெரிக்காவா? இரஷ்யா மலிவு விலையில் தந்து கொண்டிருந்த எண்ணெயை, ‘‘இனிச் சந்தை விலையில் தான் தர முடியும்” என்று இரஷ்யா சொல்லி விட்டது. இதனை எல்லாம் மூடி மறைத்தது நரேந்திர மோடி அரசு; தனது நண்பர் கார்ப்பரேட் முதலாளியான அம்பானிக்குச் சொந்தமான ‘ரிலையன்ஸ்’ நிறுவனமே, இரஷ்யாவிடம் இறக்குமதி செய்யப்பட்ட கச்சா எண்ணெய் சுத்திகரிப்பை வழங்கியிருந்தது. அதில் அதானி நிறுவனம் அடித்த பெரும் கொழுத்த ஆதாயக் கொள்ளை, மோசடி; இவை இந்திய மக்களின் வரிப் பணத்தில் கபளீகரம் செய்தது.**

அமெரிக்க அரசு அண்மையில் முகேஷ் அம்பானியின் ”ரிலையன்ஸ்’ (Reliance)நிறுவனத்திற்கு வென்சுலாவில் இருந்து நேரடியாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அதே ரிலையன்ஸ் நிறுவனம் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் பிரவுன்ஸ்வில்லி (Brownceville)யில் 50 ஆண்டுகளில் முதன் முதலாக கட்டப்படும் புதிய எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை அமைக்க உள்ளதாக அமெரிக்க டிரம்பு அரசு (மார்ச் 11, 2026) அன்று அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஒன்றைச் செய்துள்ளது. கூட்டணி நிறுவனமான அமெரிக்காவில் இது முதல் சுத்திகரிப்பு ஆலை (America first Refinig)யாகும். டெக்சாஸ் ஆலை முதலீடு 300 பில்லியன் டாலர், அதாவது இந்திய மதிப்பில் ரூபாய் 27.5 இலட்சம் கோடி மதிப்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. கூட்டணி நிறுவன அமெரிக்க நிறுவனம் தான் விரைந்து இப் பணியைச் செய்கிறது . இந்திய மக்களின் இரத்தமும், வியர்வையும் குழைத்துக் கட்டி எழுப்பி வாழும் நரேந்திர மோடியின் நண்பர், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இவர்களின் கூட்டாளியான பெரும் முதலாளி அம்பானி நிறுவனம்தான் அங்கு நிறுவப்படுகிறது .

இஸ்ரேலை இயக்கி வருபவர் அமெரிக்க அதிபர் டிரம்ப். அவரும், பல்வேறு நாட்டின் பிரமுகர்கள் போல, அவரின் நண்பரான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் இரந்தீர் ஜெயஸ்வால் பாலியல் வன்கொடுமை, சிறார் கடத்தல் குற்றவாளியான ஜெஃப்ரி எப்ஸ்டீனின் (Jeffrey Epstein files) ஆவணங்களின் மின்னஞ்சலில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ”டிரம்பின் வாழ்த்து பெற்று, இசுரேல் சென்ற இந்திய பிரதமர் மோடி அமெரிக்க அதிபரின் நலனுக்காக இஸ்ரேலில் ஆடிப் பாடினார். அதற்குப் பலன் கிடைத்தது... என்று காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட பல எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டும் பதில் தராமல் ஓடி ஒளிந்தவர் தான் நரேந்திர மோடி.

இந்தச் சட்டவிரோத உலக அளவில் நடைபெற்ற சிறார்கள் மீதான வன்புணர்ச்சிப் பாலியல் விவகாரத்தை மறைமுகமாகப் பா.ஜ.க. முன்னாள் அமைச்சரும், எம்.பி.யுமான சுப்பிரமணியன் சுவாமி 4 மாதங்களுக்கு முன்னரே ஊடகங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பொழுது எரிபொருள், கச்சா எண்ணெய் தட்டுப்பாடு, விலையேற்றத்துக்குக் காரணமாக அமெரிக்காவின் எடுபிடியாக இயங்கி வரும் இஸ்ரேலுக்கு ஆதரவு காட்டியும், ஈரானுக்கு எதிராகவும், இதுவரை நடைமுறைப்படுத்தி வந்த இந்தியாவின் வெளிநாட்டு உறவுக் கொள்கையைக் கல்லறை கட்டி வருகிறார். காரணம் என்ன? இந்தியாவின் பல பிரமுகர்களின் பேச்சுகளை ஒட்டுக் கேட்கவும், (Pecasus_N.S.O. group)வாக்குப் பதிவு எந்திரங்களில் இரகசிய மாற்றங்கள் செய்து, முடக்கி தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளவுமான செயல்பாடுகளை இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனால் பொறியில் சிக்கிய எலியைப் போல நரேந்திர மோடியின் பா.ஜ.க.அரசு உள்ளது.

அமெரிக்க நாட்டின் குடியரசுத் தலைவர் டொனால்ட் டிரம்ப், தனது ஏகாதிபத்திய பொருளாதார வெறியால், சர்வதேசச் சட்டங்களுக்கு எதிராக, கடந்த ஜனவரி 3 அன்று வெனிசுலா நாட்டின் எண்ணெய் மற்றும் எரிசக்தி வளங்கள் மீதான கட்டுப்பாட்டைத் தகர்க்கும் வகையில், தாக்குதல் நடத்தினார். போதைப் பொருள் கடத்தல், பயங்கரவாதச் செயல்களை ஊக்குவித்தல் என்பதான குற்றச்சாட்டுகள் அந்நாட்டு அதிபர் மீது சுமத்தியதோடு; அந்நாட்டைக் கைப்பற்றும் ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்டு தான் வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ, அவர் மனைவி சிலியா ஃபிளாரன்ஸ் ஆகியோரைக் ‘கராகஸ்’ நகரில் வான் வழியில் திடீர் தாக்குதல் (Operation Absolute Resolves)மூலம் படைகளால் கைது செய்து அமெரிக்க நியூயார்க்கில் சிறைப்படுத்தி வைத்துள்ளார். உலக நாடுகள் ட்ரம்பின் இந்தச் கட்டவிரோத சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்துள்ளன. ஆனால் இதுகுறித்து இந்தியா சார்பில் மோடி வாய் திறக்கவில்லை.

அமெரிக்கா இஸ்ரேல் தங்களது வஞ்சகக் கூட்டுக் கொள்கையை நிறைவேற்ற ஐ.நா. சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது . பஃஹ்ரைன் உள்ளிட்ட வளைகுடா நாடுகளைத் தூண்டிவிட்டு ஈரானுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அவையில் தீர்மானம் கொண்டு வந்துள்ளது. அமெரிக்கா தனது இராணுவத் தளங்களை அமைத்து வளைகுடா நாடுகளைப் பயன்படுத்திக் கொண்டது . அங்கு இருந்து தான் ஈரானை அமெரிக்கா தாக்கி வருகிறது . இதனால் அமெரிக்காவின் இராணுவத் தளங்களை ஈரான் குறி வைத்து தாக்குகிறது.

பாரசீக வளைகுடாவை ஒட்டி உள்ள உறுப்பு நாடுகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், பக்ரைன், ஓமன் மற்றும் குவைத் என ஆறு நாடுகளால் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக உருவாக்கப்பட்ட இந்நாடுகள்; இந்த வளைகுடா நாடுகள் (Gulf Cooperation Councilஜி.சி.சி)மற்றும் ஜோர்டான் மீது ஈரான் நடத்திய தாக்குதலைக் கண்டிப்பதாகக் கூறி ஐ.நா. பாதுகாப்பு அவையில், ஒருதலைப் பட்சமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால், அத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டிய இந்தியாவோ, தொடர்ந்து இதுவரை ஈரானுடன் இந்தியா கடைப்பிடித்து வந்துள்ள அயலுறவு, நட்புக் கோட்பாட்டைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு அமெரிக்காவுக்கு ஆதரவாகவும், ஈரானுக்கு எதிராகவும் வாக்களித்ததுள்ளது. 135 நாடுகளுடன் ஆதரித்து இத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள கொடுமை அரங்கேறியுள்ளது. அதுமட்டுமல்லாமல்; 15 நாடுகள் அங்கம் வகிக்கும் பாதுகாப்பு அவையிலும், அமெரிக்கா தலைமையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் 13 நாடுகள் ஈரானுக்கு எதிராக வாக்களித்துள்ளன. அதில் இந்தியாவும் ஒன்று. இது ”சட்டவிரோதமானது; அநீதியானது என்று ஈரான் கூறியபோதும், நரேந்திர மோடி அரசானது தனது சுய இலாபத்திற்காக இந்திய நாட்டின் வெளியுறவுக் கொள்கையைக் காலில் போட்டு மிதித்துள்ளது.

அதே நேரத்தில் வீட்டோ அதிகாரம் படைத்த இரஷ்யாவும், சீனாவும் தீர்மான வாக்கெடுப்பை எதிர்த்துப் புறக்கணிப்பு செய்து வெளிநடப்புச் செய்துள்ளன. போரைத் தொடங்குவதற்கு முன்பு அமெரிக்காவோ, இஸ்ரேலோ போர் எச்சரிக்கை ஏதும் ஈரானுக்குச் செய்யவில்லை என்று கண்டனம் தெரிவித்தன; ஈரானுக்கு கடந்த பிப்ரவரி 28 ஆம் தேதி அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டு வான் வழித் தாக்குதலில் ஈரான் முஸ்லிம் மதத் தலைவர் ஆயத்துல்லா அலி காமேனி(Ayotollah Ali khamenei)மற்றும் அவரின் சில உறவினர்களை தெஹ்ரானில் படுகொலை செய்தது .1500 க்கு மேற்பட்ட பொது மக்களையும் கொன்று குவித்துள்ளது.

அத்துடன் ‘மினாப்’ நகரில் ‘ஷஜா ரே தைய்யே பே’ எனும் பெண்கள் தொடக்கப் பள்ளியில் 180 குழந்தைகள் கொல்லப்பட்டனர். 95 பேர் படுகாயமுற்றனர். இறந்த, காயமுற்றவர்களில் பெரும்பாலும் 7 முதல் 12 வயது வரை பெண் குழந்தைகளாவர். இதற்கு ‘யுனெஸ்கே’ தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இப்படி ஆக்கிரமிப்பு செய்தது, பாதிக்கப்பட்டது பற்றி ஒரு வரி கூட இத் தீர்மானம் சொல்லவில்லை. அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்திய தாக்குதலில் இப்படியான 180 பள்ளிக் குழந்தைகளை படுகொலை செய்த ஈவு இரக்கமற்ற செயலைச் சொல்லாமல் மூடி மறைத்துத் தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது. ஈரானுக்கு எதிராக இஸ்ரேலுடன் சேர்ந்து ஆக்கிரப்பு செய்யும் மேலாதிக்க நாடுகளுக்கு ஆதரவாகத் துணை போய் போர்த் திட்டத்தைச் செய்துள்ள அமெரிக்காவிற்கு இந்தியா ஆதரவு தெரிவித்தது எப்படிச் சரியாகும்? இது கடுமையான கண்டனத்துக்குரியது என்கிறது சீனாவும் இரஷ்யாவும்!

ஈரான் ஒரு சக்தி வாய்ந்த நாடு என்று போர் தொடுத்த டிரம்பே இப்போது ஒப்புக்கொண்டுள்ளார்.

உலக நாடுகள் அனைத்தும் சௌதி அரேபியாவுடன் எண்ணெய் வாங்கவேண்டுமானால், அமெரிக்க டாலர்கள்தான் பயன்படுத்த வேண்டும். பதிலுக்குச் சௌதி அரேபியாவுக்கு இராணுவப் பாதுகாப்பு அமெரிக்கா வழங்கும்; 1974ஆம் ஆண்டு அமெரிக்காவால் போடப்பட்ட இந்த ஒப்பந்தத்தை பெட்ரோ டாலர் (Petro dollar)அமைப்பு பின்பற்றுகிறது. இந்த 52 ஆண்டுகால அமெரிக்க, வின் உலக உச்ச அதிகார ஆதிக்கத்தை (Super pow er)ஈரான் இப்போது. இந்தப் போரின் மூலம் முறித்துப்போட்டு விட்டது. ஈரான் ‘ஹார்முஸ்’ நீரிணை (Strait of Hormus) ஜலசந்தியில் எண்ணெய்க் கப்பல்கள் கடக்கும் உலகின் 20% எண்ணெய்ப் போக்குவரத்தை இனி சீன ”யுவான் (Yuan) நாணயத்தில்தான் இந்தியா உட்பட நாடுகளால் செலுத்தப்பட வேண்டும்.

உலக நாடுகளுக்குச் செல்லும் சரக்குக் கப்பல்கள் வழியை ஈரான், இசுரேல் அமெரிக்கப் போர் காரணமாக ‘ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடி வைத்துள்ளது. இந்த ஜலசந்தியின் மூலம்தான் உலக நாடுகளுக்குக் கச்சா எண்ணெய், எரிவாயு செல்லும். அதனை அடியோடு நிறுத்தப்பட்டுள்ளதால், தெற்காசிய நாடுகள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 22 இந்தியகப்பல்கள்ஹார்முஸ் ஜலசந்தியில்சிக்கியுள்ளன. இவ்வளவு சூழ்நிலைக்கு இடையிலும், போரில் மூடி வைக்கப்பட்ட ஈரானுக்குச் சொந்தமான ‘ஹார்முஸ்’ ஜலசந்தியில் சிக்கித் தவித்த 28 இந்திய தேசியக் கொடியிட்ட எண்ணெய்க் கப்பல்கள் இரண்டும் கடற்கரைப் படை பாதுகாப்புடன் ஜலசந்தியை கடந்து செல்ல (13032026) ஈரான் அனுமதி அளித்துள்ளது. ஐ.நா. அவையில் அமெரிக்காவுடன் துணை நின்று ஈரானுக்கு எதிராக வாக்களித்த டொனால்டு டிரம்பின் நண்பர் நரேந்திர மோடி தலைமை ஆளும் இந்தியாவின் நாசகாரச் செயலை நினைத்துப் பார்க்காமல், நமக்கு ஈரான் செய்த இது போன்ற மாபெரும் உதவியை மோடியும், அவரது அமைச்சர் படைக்கூட்டமும் மறுக்க, மறைக்க முடியுமா?

”பெரும்பாலான இந்தியர்கள் ஈரானுக்கு ஆதரவாக நிற்பதை நாங்கள் கண்டோம்; அவர்கள் அமெரிக்கா இஸ்ரேலின் அடக்குமுறையைக் கண்டித்துக் கொல்லப்பட்ட பள்ளிக் குழந்தைகளுடன் ஒற்றுமையையும் காட்டினர்; எரிவாயு பற்றாக்குறையால்,இந்திய மக்கள் பாதிக்கக் கூடாது என்று நாங்கள் உணர்ந்தோம்; எனவே, ஹார்முஸ் நீரிணை (ஜலசந்தி) வழியாக இந்தியக் கப்பல்களை அனுமதித்தோம்; இது இந்திய மக்களுக்காக மட்டுமே; இந்திய அரசாங்கத்திற்காக அல்ல ! இப்படிக் கூறியிருப்பவர் ஈரானின் உயர் தலைவரின் பிரதிநிதியான அப்துல் மஜித் ஹக்ஹீம் இலாஹி என்பவர்.

ஈரான் இஸ்ரேல், அமெரிக்க இடையேயான போர் காரணமாக, மோடியின் நிர்வாகத் தோல்வியால் இந்தியாவுக்குக் கிடைக்கும் கச்சா எண்ணெய், எரிவாயு போன்றவை கடுமையாகத் தடைப்பட்டுள்ளன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சமையல் எரிவாயு உருளைகள் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் வீட்டுப் பயன்பாடு சிலிண்டர்க்கு முன்னுரிமை கொடுக்கவும், சமையல் எரிவாயு சிலிண்டர் உற்பத்தியை அதிகரிக்கவும், எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு அறிவுறுத்தி இருந்தாலும்; தட்டுப்பாடு தீருமா ? என்பது கேள்விக்குறியே! அல்லது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமா? சென்னையில் உள்ள முன்னணி உணவகங்கள், பல்வேறு சிற்றுண்டி நிறுவனங்களில் காலை, மாலை உணவு போன்றவை கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முன்பதிவு செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டர் கிடைக்காத தட்டுப்பாட்டால், உணவுப் பஞ்ச நிலை ஏற்பட்டுள்ளது. மோடி அரசின் கையாலாக தனத்தால் செயற்கை உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் உணவுக் கொள்கை சிதைந்து போய் உள்ளது. உணவு விடுதிகள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. குறித்த நேரத்தில் தயாரிக்கப்படும் உணவுகளை வழங்கும் வகையில்; விறகு அடுப்புகள் பயன்படுத்தவும் ஓட்டல்கள் தொடங்கியுள்ளன. சென்னை போன்ற மாநகரங்களில் உணவு கிடைப்பது சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால்,சிறிய உணவு விடுதிகள், நடைபாதைக் கடைகள் நம்பியுள்ள வேலைக்குச் செல்லும் திருமணம் ஆகாத குடும்பமற்ற இளைஞர்கள் கடுமையாகத் திண்டாடி வருகின்றனர்.

இதற்கு உடனடித் தீர்வு காணாமல் ஒன்றிய அரசு ”எஸ்மா சட்டத்தைப் பிறப்பித்து அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளது கடும் கண்டனத்திற்குரியது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சனையாக எண்ணெய், எரிவாயு தட்டுப்பாடு உருவெடுத்தும் உள்ளது.

கவிஞர்
**தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



சமையல் எரிவாயு உருளைகள் கிடைக்காததால்; வணிக ரீதியான பாதிப்பு ஏற்பட்டுப் பொருளாதாரத்தைச் சிதைக்கும் மந்த நிலை உருவாகி வருகின்றது. பொது மக்களுக்கு ஒன்றிய அரசு மானியம் வழங்குவதன் மூலம்; மின்சார அடுப்பு வாங்குவதையும், சூரிய ஒளி மூலம் மின் தயாரிப்பு வசதி ஏற்படுத்தித் தருவதும் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், கிராமப்புற மக்களுக்கு மண்ணெண்ணெய் இலவசமாக வழங்குவதும் பொது மக்களுக்குத் தற்போதைய எரிபொருள் எண்ணெய்ச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு வழி அமையும் எனப் பொருளாதார, சமூக நிபுணர்கள் கூறி வருகிறார்கள்.

ஒன்றிய பெட்ரோலியம் துறை இயற்கை எரிவாயுத்துறை இணை அமைச்சர் ”சுஜாதா சர்மா பதிவுகால இடைவெளியை நகர்ப்புறங்களில் 25 நாட்கள் என்றும், கிராமப்புறங்களில் 45 நாட்கள் என்றும் நிர்ணயித்து பதிவு இடைவெளியில் பாரபட்சம் காட்டுகிற விதத்தில் எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றுவது போல் செய்திருக்கிறார். பற்றாக்குறையைச் சமாளிக்க கிராமப்புற மக்களைப் பலி கடாவாக்கி இருக்கிறார்.

ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் அன்றாட வாழ்க்கையைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. எரிவாயு சிலிண்டர் கிடைக்காததால் பல குடும்பங்கள் விறகு அடுப்புக்குத் திரும்பும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்தத் தட்டுப்பாட்டைப்பயன்படுத்தி கள்ளச் சந்தையில் சிலிண்டர்கள் விற்கப்படும் சூழ்நிலை உள்ளது. எரிவாயு தட்டுப்பாடு நீடித்தால் வீட்டில் சமையல் அறை மட்டும் அல்ல; வெளியில் பிற வாணிப, தொழில் துறைகளும் முடங்கும் அபாயம் உள்ளது. தேநீர்க் கடைகள், வீதி, தெருவோரக் கடைகள், சிறு உணவகங்கள் மூடப்படும் சூழ் நிலைக்குத் தள்ளப்படும். பள்ளி, கல்லூரி விடுதி உணவகங்கள், வேலைக்குச் செல்லும் ஆண், பெண் தங்கும் விடுதிகள், உணவுத் தயாரிப்பு நிலை பாதிக்கப்பட்டு மாணவர்கள், பணியாளர்கள், தொழிலாளர்கள் மிகப்பெரும் சிரமத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள்.

வெளியில் உணவுப் பொருட்கள் விலை உயரும். முன்பதிவு செய்தவர்களுக்குச் சிலிண்டர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்; சமையல் எரிவாயு விநியோகம் அதிகரிக்க வேண்டும்; கள்ளச் சந்தையில் இருந்து மலிவு விலை உருளைகள் (LPG Af fordable cylinderSubsidized Cylinder)கிடைக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கையைப் பொதுமக்கள் எழுப்பி வருகிறார்கள் என்பதனைக் கருத்தில் கொண்டுதான்; முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர் அதிகாரிகள் மட்டத்தில் ஆய்வுக் கூட்டங்கள் போட்டும், பிரதமர் அவர்களுக்கு, கடிதங்கள் எழுதியதன் மூலமும் வலியுறுத்தியும் உள்ளார்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமையல் எரிபொருள், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு குறித்து தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கூட்டமும் நடத்தினார். தமிழ்நாட்டில் நிலவும் நிலைகுறித்து மாவட்ட ஆட்சியர்கள் அனைவரிடம் காணொளி மூலம் கேட்டறிந்து, பொதுமக்களுக்கு உள்ள குறைகள் நீக்க துரித நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். பெட்ரோல், டீசல், எரிபொருள் தட்டுப்பாடு, நெருக்கடிகளை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும் என்று நினைவூட்டி பிரதமருக்கும் தொடர்புடைய ஒன்றிய அமைச்சருக்கும் கடிதங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தி உள்ளார். அது மட்டும் இல்லாமல் பாராளுமன்றத்தில் இரு அவைகளிலும் கழக உறுப்பினர்கள் இந்தியா கூட்டணியின் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுடன் ஒன்றிய அரசுக்கு நினைவுப் படுத்தியதோடு மோடி அரசின் தவறான அயலுறவுக் கொள்கையைக் கண்டித்தும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். பெட்ரோல் டீசல் நிலையங்களில் கடந்த சில நாட்களாக வாகன ஓட்டிகள் கூட்டம் கூட்டமாக வந்து நீண்ட வரிசை நிற்கும் அவல நிலையால் கடும் நெரிசல் ஏற்பட்டு வருகின்றது. இதனால், காவல்துறையானது சட்டம் ஒழுங்கிற்குக் குறை ஏதும் ஏற்படாத வகையில், பாதுகாப்பு தந்து கொண்டிருக்கிறது.

எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டால், பொதுமக்கள் அல்லல்படும் சூழ்நிலையும் எழுந்து உள்ளது. எரிவாயு தட்டுப்பாடு. ஏற்படும் வதந்தியால் அல்லல்படும் பொதுமக்கள் பற்றிய சூழ்நிலை குறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அத்துடன் தலைமைச் செயலகத்தில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டங்களை நடத்திச் சமையல் எரிவாயு சிலிண்டர், பெட்ரோல், டீசல் விநியோகம் தொடர்பாக ஆய்வுக்கூட்டம் நடத்திப் பிரதமர் மோடி,ஒன்றிய அமைச்சர்களுக்கு கடிதம் எழுதியதோடு, அதனைச் சமாளிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டும் என்று கோரிக்கையும் வைத்துள்ளார்.

இந்நிலையில் தமிழகத்திற்கு எந்தத் திட்டங்களும், நிதி ஒதுக்கீடும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை; தமிழகத்தைத் தொடர்ந்து வஞ்சிக்கும் என்.டி.ஏ. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் (15 03 2026) தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சார்பில் தமிழ் நாடெங்கும் நடைபெற்றன.

உணவகங்கள், வணிக நிறுவனங்கள், எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு சரி வர இயங்கவில்லை. சிறு குறு நடுத்தரத் தொழில்கள் பாதிப்பு, மிகவும் பாதிப்பு, தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி, 100 நாள் வேலை திட்ட நிதி, குடிநீர் இணைப்பு நிதி, மதுரை, கோவை மெட்ரோ இரயில் திட்டம், ஓசூர் விமான நிலையம் உள்ளிட்ட எந்தவிதமான வளர்ச்சிக்கும் தமிழகத்திற்கு அனுமதி தராமல், தொடர்ந்து முட்டுக்கட்டை; மும்மொழி திணிப்பு என்ற பெயரால் தமிழ் மொழியை அழிக்கத் துடிப்பது, கீழடி அகழ்வாய்வு முடிவுகளை ஏற்காமல் மறுப்பது எனத் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடியின் பா.ஜ.க. அரசைக் கண்டித்துதான் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

குடும்பப் பெண்கள் தங்கள் வாயிலும், வயிற்றிலும் அடித்து அழக்கூடிய அளவுக்கு, பிரதமர் மோடி மகளிர் தின பரிசாகக் கடந்த மார்ச் 7ஆம் தேதி, எரிவாயு விலையை உயர்த்தினார். வீட்டுக்குப் பயன்படும் சமையல் எரிவாயு சிலிண்டர் (14.2KG) விலை ரூபாய் 60 உயர்த்தி 928.50ரூபாய்க்கும், வணிகப் பயன்பாட்டுச் சிலிண்டர் (19 KG)ரூபாய் 115 உயர்த்தி ரூ. 2043.50 க்கும் விற்பனை செய்ய உத்தரவிட்டுள்ளார். இதனால் அனைத்து விற்பனைபொருள்களும் வணிகங்களும் விலை ஏற்றத்தைச் சந்திக்க வேண்டியுள்ளது . ஏற்கெனவே, வரிச்சுமையினால் தத்தளிக்கும் மக்கள் தலையில், மேலும், மேலும் விலை ஏற்றத்தை உருவாக்கி வருகிறார் மோடி. இதனால் எரிவாயு தட்டுப்பாடு 15% முதல் 20% தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் பூவோடும், பொட்டோடும் அரசியல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற எடப்பாடி, என்.டி.ஏ. கூட்டமோ இதனை கண்டித்துக் குரல் ஏதும் கொடுக்கவில்லை.

தமிழக மக்களின் இன்னல், இடர்ப்பாடுகளை நீக்குவதற்காகத் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் வணிகச் சிலிண்டர் தட்டுப்பாடு சலுகைகளை அறிவித்துள்ளார். இதன் மூலம் தேநீர்க் கடைகள், கிளவுட்டு கிச்சன் உள்ளிட்ட அனைத்து உணவகங்களுக்கும், கூடுதல் மின்சார நுகர்விற்கு ரூபாய் 2 மானியம் சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், மின் அடுப்புகள், மின் சூடேற்றிகள் உள்ளிட்ட உபகரணங்கள் வாங்க மானியத்துடன் கடன் வழங்கப்படும் எல்.பி.ஜி.க்கு மாற்றாக மண்ணெண்ணெய், விறகு போன்றவற்றைப் பயன்படுத்த மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெறத் தேவையில்லை.

பால் உற்பத்தியாளர்களிடம் மீதமாகும் பாலினை, ஆவின் பால் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுக் கொள்ளும் உணவகங்கள் மூடலால் தேங்கியுள்ள காய்கறிகள், பழங்கள் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் உழவர் சந்தைகளில் விற்பனை செய்யலாம் இம்மாத பொது விநியோகத் திட்டத்திற்குக் கூடுதலாக 3,228 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் குடும்ப அட்டதாரர்களுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது. சிலி ண்டர் தட்டுப்பாடு தொடரும் வரை இச்சலுகை தொடரும் எனவும்; மக்கள் எரிவாயு, எண்ணெய்த் தட்டுப்பாடு, விலை ஏற்ற துன்பத்திலும், தொல்லையிலும் இடர் நீங்க, இந்த பொன்னான வாய்ப்பை மக்களுக்கு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்து தமிழ் மக்களின் சுமைகளைக் குறைத்திட அரும்பாடுபட்டு வருகிறார்.



பத்திரிக்கையாளர்களின் நலன் சார்ந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு அரசாணைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், திருவாரூர் பிரஸ் கிளப் சார்பில் மூத்த பத்திரிக்கை யாளர் இமயம் ஜெயராமன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணனைச் சந்தித்து முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.



தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியம் தப்பாத்தி கிராமத்தில் ரூ29.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார் நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் மும்மூர்த்தி, ராதாகிருஷ்ணன், செல்வராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.